2020 பிப்ரவரி 17]

தோற்றுவிக்கப்பட்டு, பின்பு அது கால்நடை மருந்தகமாகவும், அதற்குப் பின்னர், கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்பட வேண்டும். ஆய்குடி ஊராட்சியில் 3,000 கால்நடை அலகுகளுக்கும் குறைவாக உள்ளதால் அங்கு புதிய கால்நடை கிளை நிலையம்கூட அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

ஆரம்ப சுகாதார நிலையம்

***52573—திரு. கே. பழனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், இருங்காட்டுக்கோட்டை–காட்ரம்பாக்கம் இடையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இருங்காட்டுக்கோட்டை-காட்ரம்பாக்கம் இடையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 பிப்ரவரி 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மக்கள் முதல்வர், குடிமராமத்துப் பணி நாயகர், இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் மாவட்டத்தினுடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. பா. பென்ஜமின் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியில் ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருங்காட்டுக்கோட்டை, காட்ரம்பாக்கம் ஆகிய ஊராட்சிகள் இருக்கின்றன. இந்தத் தொகுதி, தொழிற்சாலைகள் நிறைந்த தொகுதியாக உள்ளது. அந்த இடத்தில் பொதுமக்கள் 7,000 பேர் வசிக்கிறார்கள். அங்குள்ள தொழிற்சாலைகளில் தினந்தோறும் 20,000 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அந்த இடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதால், அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அந்தக் கிராமத்தில் மக்கள் தொகை போதுமானதாக இல்லை என்று துறை ரீதியாக கருத்துரு வரப்பெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வருங்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

2020 பிப்ரவரி 17]

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் 20,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், 7,000 பொது மக்கள் வாழ்கிறார்கள். அந்த இடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

இ–சேவை மையம்

***26157—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *அம்மா இ–சேவை மையங்களை வட்டாட்சியர் அலுவலகங்கள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மட்டுமல்லாது கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களிலும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 120 கோடி மக்கள் வாழ்கின்ற இந்திய தேசத்திலே, நல்லாட்சி நடத்துகிற நாடு, அன்னைத் தமிழ்நாடு என்கிற ஒரு வரலாற்றுப் பெருமையைப் பெற்றுத் தந்து, 'மூன்று நாட்கள் நிலைக்காது' என்று கூறப்பட்ட அந்த வியூகத்தைத் தகர்த்தெறிந்து, மூன்று ஆண்டுகள் மட்டுமல்ல, இதே இடத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'நூறு ஆண்டுகள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அன்னைத் தமிழகத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்கு*